## ***பாடசாலைக் கீதம்***

ராகம் : பிலஹரி தாளம் : ஆதி

**பல்லவி**

*புற்றளை மகா வித்தியாலயம்*

**புகழுடன் வாழிய வாழியவே**

*(புற்றளை...)*

**அனுபல்லவி**

*புலவரதொலியறாப் புலோலியம்பதியில்*

*பொலிவு பெற்றெழிலுடன் ஓங்குகவே*

*(புற்றளை...)*

**சரணம்**

*எண்ணும் எழுத்தும் முதலாகவுள்ள*

*இவ்வுலகேத்திடும் கலையெலாமோங்க*

*முந்தை வேத முதலெழுத்தாகும்*

*எந்தை திருவருள் என்றென்றும் நிற்க*

*(புற்றளை...)*

*ஆண்மை வீரமும் அறிவுடன் கற்பும்*

*ஆமிவை நாலும் அணியுடன் தேங்க*

*மாணவர் மனதில் ஞான சூரியன்*

*மாண்புடன் துலங்க அகவிருளகல*

*(புற்றளை...)*

*ஆடல் பாடல் ஆங்கிலம் செந்தமிழ்*

*ஆண்டவன் பெயரில் அளவிலா அன்பு*

*காண்பதற் கெளிமை யாவையும் கலந்து*

*கற்பவை கற்றுக் கற்றாங்கொழுக* *(புற்றளை...)*